# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1796/3 - 2013 පෙබරවාරි මස 05 වැනි අඟහරුවාදා - 2013.02.05

*1796/3 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பிலக்கம் : කු/ප්‍රාලේ/16/04/36.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின்
குறிப்பிலக்கம் : LD/05/2009/WS/117.

பொதுமக்களின் தேவைக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணியை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியிருப்பதால், காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விவரங்கள் :**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவில், உடகம்பஹ கோரளையின் சிறு பிரிவில், கெங்கல்ல கிராமத்தில் அமைந்த நிலஅளவை மா அதிபரால் அளந்து, 2012.12.31 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 6220 ஆரம்ப வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள "பலகொல்ல வத்த" என்னும் காணியில் சுமார் 0.0635 ஹெக்டெயார் விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு :-

**காணித்துண்டிலக்கம் :1**

காணியின் பெயர் : "பலகொல்ல வத்த" - விஸ்தீரணம் : 0.0635 ஹெக்டெயார்.

வடக்கு : ஆரம்ப வரைபட இலக்கம் 2712 இல் காணித் துண்டிலக்கம் 69 ;
கிழக்கு : ஆரம்ப வரைபட இலக்கம் 2712 இல் காணித் துண்டிலக்கம் 69 ;
தெற்கு : ஆரம்ப வரைபட இலக்கம் 2712 இல் காணித் துண்டிலக்கம் 69 ;
மேற்கு : ஆரம்ப வரைபட இலக்கம் 2712 இல் காணித் துண்டிலக்கம் 69.

உரிமைகோருபவர்களின் பெயரும் முகவரியும் :

1. சங்கைக்குரிய தல்பொத தம்மஜோதி தேரர்,
பௌத்த மத்தியஸ்தானம்,
பலகொல்ல,
கெங்கல்ல.

2. பிரதான பொறுப்பாளர்,
பிரதான பொறுப்பாளர் திணைக்களம்,
கொழும்பு 07.

மேற்குறிப்பிட்ட காணிகளுக்கு உரிமைகோருபவரோ அல்லது வேறு தொடர்புகள் இருப்பதாக கூறும் சகலரும் தாமாகவோ அல்லது அவர்களின் கடிதம் மூலம் அதிகாரம் உள்ளவர்களாகவோ இருப்பின் 2013, ஏப்பிறல் 03 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு குண்டசாலை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னைச் சந்திக்க வேண்டும்.

மேலும் 2013, மாச்சு மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் அக்காணியையோ அல்லது அக்காணிக்கு தொடர்புடைய தத்தமது உரிமைகளின் தன்மைகளையும் அக்காணியை எடுத்துக் கொள்ளுதலுக்கான நட்டஈடு கோருவதற்குரிய காரணங்கள் பற்றிய விபரங்களையும் நட்டஈட்டுத் தொகை, அத்தொகையை கணக்கீடு செய்த முறையையும் கடிதமூலம் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்க வேண்டும். அவற்றை உரிமைகள் கோரல் பற்றிய ஒப்பனை பரிசீலனைச் செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

எல். ஏ. டீ. கீதா இந்திராணி,
பிரதேச செயலாளர்,
குண்டசாலை.

பிரதேச செயலகம்,
குண்டசாலை.

2-627

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : வ/18/83/2008.

02.06.2011 ஆந் திகதிய 1708/26 ஆம் இலக்க, (மேலதிக விசேட) வர்த்தமானியில் பகுதி 1 இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், ராகம் பற்றில் சிறு பிரிவில் ஸ்வெடகெய்யாவ கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. 3740 உம் 2010.08.20 ஆந் திகதிய முதற்சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு இல. 01, 02, 03 ஆக காணப்பட்டுள்ள முழு பிரமாணம் 0.9013 ஹெக்டெயார் விஸ்தீரணம் கொண்ட அன மாதன்கஹவத்தை என்னும் கீழ் குறிக்கப்பட்ட காணித்துண்டுகள் மூன்றின் விவரங்கள் பின்வருமாறு :-

**1. துண்டு இல. : 1**

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | மாதன்கஹவத்தை |
| விபரம் | : | தோட்டம், 35 வருட வயதுடைய 34 தென்னை மரங்களும் 12 வருட வயதுடைய புளியம் பழ மரம் ஒன்றும் உள்ளன. |
| உரிமைகோருபவர் | : | அரசு |
| விஸ்தீரணம் | : | 0.4057 ஹெக்டெயார். |

**2. துண்டு இல. : 2**

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | மாதன்கஹவத்தை |
| விபரம் | : | தோட்டம், 35 வருட வயதுடைய 30 தென்னை மரங்களும் இலங்கை கடற் படையால் கட்டப்பட்ட 2 நிரந்தரக் கட்டிடங்களும் ஒரு காவல் வீடும் உள்ளன. |
| உரிமைகோருபவர் | : | அரசு |
| விஸ்தீரணம் | : | 0.3744 ஹெக்டெயார். |

**3. துண்டு இல. : 3**

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | மாதன்கஹவத்தை |
| விபரம் | : | தோட்டம், 35 வருட வயதுடைய 10 தென்னை மரங்களும் இலங்கை கடற் படையால் கட்டப்பட்ட நிரந்தரக் கட்டிடங்களும் உள்ளன. |
| உரிமைகோருபவர் | : | அரசு |
| விஸ்தீரணம் | : | 0.1212 ஹெக்டெயார். |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையம் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சந்திமா திஸாநாயக்க,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை,
2013, சனவரி 28.

2- 628

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : தொ/கா/1/அக்அதி/96.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தின், தொடங்கொட பிரதேச செயலாளர் பிரிவில் இந்தகொடபத்துவ சிறுபிரிவில், லியனகொட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அதிபதியால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. க4348 மற்றும் 2012.12.31ஆந் திகதிய துண்டு இல. 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 0.0389 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய காணித்துண்டின் விபரம் பின்வருமாறு:

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர் : பெட்டிகலலந்தவத்த ; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : டபிள்யூ. டீ. வை. ஆர். குணரத்ன, இல. 39/9, த மெல் வீதி, கடுபெத்த, மொரட்டுவ மற்றும் டபிள்யூ. டீ. ஏ. பீ. குணரத்ன, இல. 15/4, கிரேஸ் பீரிஸ் மாவத்தை, பாணந்துறை ; விஸ்தீரணம் : 0.0389 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு தொடங்கொட பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மை யையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். டபிள்யு. ஆர். வெத்தசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
தொடங்கொடை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தொடங்கொடை,
2013.01.16.

02- 636

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.